Source: *Tamil Murasu*, p2
Date: 18 July 2018

செய்திக்கொத்து

## சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழக மாணவர்களுக்குப் புதிய பதிவு முறை

அடுத்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவர்கள் வரும் தவணையில் படிக்க விரும்பும் பாடங்களுக்காக பதிவு செய்ய ஒரு புது பாடத்தொகுதிகள் பதிவுமுறையைப் பயன்படுத்துவர்.

2003 ஆண்டிலிருந்து நடப்பில் இருந்து வரும் மையப் படுத்தப்பட்ட இணையப் பதிவு முறைவழி மாணவர்கள் தாங்கள் பெற்ற புள்ளிகளைக்கொண்டு விருப்பமான பாடங் களுக்கு ஏல முறையில் பதிவு செய்து வந்தார்கள். இந்தப் புள்ளிகள் தவணைத் தொடக்கத்திலும் தவணை முடிவில் நிகழும் கருத்தறிப் பயிற்சிகளிலும் வழங்கப்படும்.

அமலாக்கம் காணவிருக்கும் இந்தப் புதிய பதிவுமுறையி னால் மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்வி தொடர்பான சேவைகள் தரமானதாகும் என்றும் மாணவர்களின் விருப்பம், தேவைகளுக்கு ஏற்பப் பாடங்களை வழங்க முடியும் என்றும் கூறினார் பல்கலைக்கழகத்தின் இளங் கலைக் கல்விப் பிரிவின் மூத்த துணை கல்வி நிர்வாகி பேராசிரியர் பெர்ணட் டான்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.